2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது இருக்கின்ற இடத்திலிருந்து எவ்வளவு தூரத்திற்கு அவர்கள், வழக்காடுபவர்கள் செல்கின்றார்கள், எவ்வளவு வழக்குகள் அந்த ஊரிலே இருக்கின்றன, இந்தத் தன்மைகளையெல்லாம் பார்த்து உயர் நீதிமன்றத்திடம் கருத்து கேட்டு, அம்மாவிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஆணை பெறப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 25, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

25—

உயர்மட்டக் குழு

***42843—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊதியம், இதர சலுகைக்ள் நிர்ணயம் செய்யவும், பணியாளர்களைத் தேர்வு செய்யவும் உயர்மட்டக் குழு அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கூட்டுறவு வங்கிகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர சலுகைகளை நிர்ணயம் செய்யவும், ப்ணியாளர்களை தேர்வு செய்யவும் உயர்மட்டக் குழு அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

முற்பகல் 10—45

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் செயல்படுகின்ற, மாநில அளவிலே செயல்படுகின்ற தலைமைக் கூட்டுறவு வங்கி, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மாவட்ட அளவிலே செயல்படுகின்ற மத்திய கூட்டுறவு வங்கிகள், நகர, கிராம அளவிலே செயல்படுகின்ற கிராம தொடக்க வேளாண்மை வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிகள்,

LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

[2005 செப்டம்பர் 23

ஆகிய வங்கிகளிலே பணிபுரியும் ஊழியர்கள், பொதுவாகத் தங்களுடைய சலுகைகள், சம்பள நிர்ணயம் போன்ற கோரிக்கைகள் வைப்பதற்கு, ஆங்காங்கே தனித்தனியான நிர்வாக அமைப்பு அடிப்படையிலே இருக்கின்ற காரணத்தினால், ஒன்று மாநில கூட்டுறவு பதிவாளர் அவர்களிடம் கோரிக்கை வைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது; அல்லது அரசிடம் கோரிக்கை வைக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. பொதுவாக அரசினுடைய பிரதான திட்டமான பொது விநியோகத் திட்டத்தை, கிராம நிர்வாக அளவிலே, கூட்டுறவு வங்கிகள் செயல்படுத்துகின்ற சூழ்நிலையில், அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை வைப்பதற்கு, தமிழக அரசின் தலைமையின்கீழ் என்ற அளவிலான ஒரு குழு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள், மற்ற எந்தத் தலைவர்களையும்விட, அரசுப் பணியாளர்களுக்கு அள்ளித் தருவதிலே கடையேழு வள்ளல்களை விடவும் தலைசிறந்தவர் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே இருக்கிற விவரம் என்னவென்றால், 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில், விதி எண் 149-ன்படி ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், அதன் பணியாளர்கள், பணி நிலைத் திறன், ஊதியம், இதர சலுகைகள், பணியாளர்கள் எண்ணிக்கை, ஒழுங்குமுறை விதிகள் தொடர்பான சிறப்பு துணை விதிகள் அரசின் ஒப்புதல் பெற்று அமைத்து இருக்க வேண்டும். ஆனால், சென்ற காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடைய காலத்தில், சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நகர வளர்ச்சி வங்கிகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றினுடைய சம்பளங்களை, அதனுடைய தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், பல்வேறு வகையாக உயர்த்தி, அந்த அமைப்புகள் எல்லாம் சீர்கெட்டுப் போகத்தக்க ஒரு சூழ்நிலையை உருவாக்கி விட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளினுடைய செயலாளர்களுடைய சம்பளம், அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய சம்பளத்தைவிட கூடுதலாக, இன்னும் கூடுதலாகச் சொல்லப்போனால், மாநிலத்தினுடைய கூட்டுறவு வங்கிகளை நிர்வகிக்கிற மாநிலப் பதிவாளரினுடைய சம்பளத்தைவிட கூடுதலான சம்பளம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளினுடைய செயலாளர்களுக்கு கடந்த

2005 செப்டம்பர் 23]

காலத்தில் சில உள்நோக்கங்களோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடைய காலத்தில், வழங்கப்பட்டதன் காரணமாக அதுகுறித்து பல்வேறு வழக்குகள், நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால் அந்த வழக்குகள் முடிவுற்றவுடன் அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், இங்கே நீண்டதொரு விளக்கத்தை அளித்து இருக்கின்றார்கள். கூட்டுறவுச் சட்டம் விதி 149 என்பது, பொதுவாக கூட்டுறவு நிறுவனங்களிலே பணி புரிகின்ற ஊழியர்களுக்கு எதிரான ஒரு விதியாக அமைந்து இருக்கின்றது. அதைப் பரிசீலனை செய்து, அந்த விதியை எதிர்காலத்திலே தளர்த்த வேண்டும் என்ற அடிப்படையிலேயும், அதிலும் மாநிலப் பதிவாளர் ஒருவரே நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதன் காரணமாக, அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளை நிர்ணயம் செய்வதற்கு எதிர்காலத்திலாவது அதற்கான ஒரு தலைமை அளவிலே அமைப்பை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலப் பதிவாளருக்குக்கீழ், அந்த அந்த மாவட்டங்களிலே இணைப் பதிவாளர்கள் என்றும், அவர்களுக்குக்கீழ் துணைப் பதிவாளர்கள் என்றும் தனித்தனியாக நிர்வாக அமைப்புகளுக்காகத் தக்க சீரான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. பொதுமக்களுக்கும், கூட்டுறவு வங்கிகளிலே டெபாசிட் செய்பவர்களுக்கும், லேவாதேவி செய்பவர்களுக்கும் பாதுகாப்பாகத்தான் விதி எண் 149 என்பது அமல்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய விதி இருக்கும்போதே அந்த விதிக்குப் புறம்பாக சென்றகாலத்தில், தேர்வு செய்யப்பட்ட தலைவர்கள் காலத்தில் 4,497 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே, 3,000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நசிந்துபோகத்தக்க அளவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் செயல்பட்டதற்கு காரணமே அந்த விதிக்குப் புறம்பாக நடந்ததுதான் என்கின்ற தகவலைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26, திரு. பி.கே.டி. நடராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.